2025 செப்டம்பர் மாதம் 25 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 147/2023

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW1 நபரின் வாக்கு மூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – ராசாத்தி |
| கணவர் பெயர்: | லேட்.கருப்பையா |
| ஊர்: | கண்டமனூர் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 42 |

தேதி : 25.09.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1. | 29.11.2022ம் தேதியிட்டு கண்டமனூர் விலக்கு காவல்நிலைய குற்ற எண்.209/2022 பிரிவுகள் 279, 337 இ.த.சன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.1.** |
| 2. | கண்டமனூர் விலக்கு காவல்நிலைய குற்ற எண்.209/2022 பிரிவுகள் 279, 337 இ.த.சன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் 279, 337, 304ஏ இ.த.ச.ஆக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து தாக்கல் செய்யப்பட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையின் ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.2.** |
| 3. | எனது மகள் புவனேஸ்வரி என்பவருக்கு வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை சான்று ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.3.** |
| 4. | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் சான்றொப்பமிட்ட நகல் – **ம.சா.ஆ.4.** |

| | |
|---|---|
| 5. | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீடு சான்றொப்பமிட்ட நகல் – **ம.சா.ஆ.5.** |
| 6. | எனது மகள் புவனேஸ்வரி என்பவருக்கு கோயம்புத்தூர் போலீஸ் பயிற்சி பள்ளியிலிருந்து வழங்கப்பட்ட அடையாள அட்டையின் சான்றொப்பமிட்ட நகல் – **ம.சா.ஆ.6.** (மேற்படி ஆவணம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). |
| 7. | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமத்தின் சான்றொப்பமிட்ட நகல் – **ம.சா.ஆ.7.** |
| 8. | 06.12.2022ம் தேதியிட்டு எனது மகள் புவனேஸ்வரி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழின் கணினி நகல் – **ம.சா.ஆ.8.** |
| 9. | எனது கரூர் வைசிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.9.** |
| 10. | எனது கணவர் கருப்பையா என்வரின் கரூர் வைசிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஒளிப்பதிவு நகல் மற்றும் எனது கணவர் கருப்பையா மற்றும் என்னுடைய ஆதார் அடையாள அட்டைகளின் ஒளிப்பதிவு நகல்கள் (என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.10.** |
| 11. | விபத்தில் சம்பந்தப்பட்ட TN 58 BV 3591 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் – **ம.சா.ஆ.11.** |
| 12. | கண்டமனூர் விலக்கு காவல்நிலைய குற்ற எண்.209/2022 பிரிவுகள் 279, 337 இ.த.சன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் 279, 337, 304ஏ இ.த.ச.ஆக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கண்ட குற்ற இறுதி அறிக்கையின் உண்மை நகல் – **ம.சா.ஆ.12.** |
| 13. | இறந்துபோன புவனேஸ்வரி என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.13.** |

நான் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.25 16:20:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
25.09.2025